தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 2

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

I: வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

குமரி மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர் குடும்பத்தினருக்கு உதவிப் பணம் வழங்கல்

*குறுகிய கால வினா எண். 35—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை ஏறுகின்ற தொழிலாளிகள் பணியின் போது விழுந்து இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு ரூபாய் 5,000 உதவிப்பணம் வழங்கப்படும் என்று அரசு உத்தரவிற்குப் பிறகு, குமரி மாவட்டத்தில் அப்படி இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுள் எத்தனை பேருடைய குடும்பங்களுக்கு அரசு இதுவரை உதவிப்பணம் வழங்கியிருக்கின்றது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் 8 நேர்வுகளில் உதவித் தொகை அளிக்க பரிந்துரை செய்துள்ளார். அவர்களுள், 3 பேர்களுடைய குடும்பங்களுக்கு அரசு இதுவரை உதவிப்பணம் வழங்கியுள்ளது.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 8 பேருக்கு சிபார்சு செய்யப்பட்டு, 3 பேருக்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். மற்ற 5 பேருக்கு வழங்குவதிலே ஏன் இந்தக் காலதாமதம்? உடனடியாக வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஆகவில்லை. இப்போதுதான் வந்து இருக்கிறது. விரைவில் கொடுக்கப்படும்.

[1979 ஏப்ரல் 2

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் தென்னை மரம் அதிகமாக இருக்கிறது. தென்னை மரத்தில் இருந்து விழுந்து இறந்து விட்டால் உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தென்னை மரத்தில் இருந்து கீழே விழுந் தாலும் சரி, அல்லது பனை மரத்தில் இருந்து விழுந்தாலும் சரி, அல்லது பஞ்சாயத்து யூனியன் நகராட்சிகளில் கழிவு பொருள்களை வெளியே எடுக்கிறபோது அவர்கள் இறந் போனாலும் சரி, அல்லது பொதுவாக, அரசு பொதுப் ணத்தில் அமைக்கப்படும் கிணறுகளை வெட்டுகின்றபோது அவற்றில் இறந்தாலும் சரி, இப்போதுதான், இந்த அரசு வந்ததற்குப் பின்னால் தான் ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் ரூ. 750லிருந்து ரூ. 1,000 வரை கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளி அதில் இருந்து விழுந்து இறந்து போனால், அந்த ஊர் கிராம முறைப்படி அடக்கம் செய்ய உறவினர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அந்த உறவினர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் தாமதம் ஆகிறது. ஏனெனில் ஆஸ்பிடல் சர்ட்டிபிகேட் இல்லை, அது கொடுத்தால் தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள், சில இடங்களில் ஆஸ்பிடல் அதிகாரிகள் சர்ட்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். இந்தக் குறை பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, இதிலே இரண்டு விதமான குறைபாடுகள் இருக்கின்றன என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று, மருத்துவர்கள் சர்ட்டி பிகேட் கொடுப்பது. மருத்துவர்கள் கொடுக்கிற சர்ட்டிபிகேட் வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஆனால் பலர் குடித்து விட்டு மரத்தில் இருந்து ஏறி விழுந்து விடுவது, என்று சொல்லப் படுகிறது. ஆனால் இதற்கு முன்பு உதவித் தொகை கொடுக்க வேண்டுமானால் வட்டாட்சித் தலைவர் சிபார்சு செய்து, கோட்டாட்சித் தலைவர் சிபார்சு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்து, வருவாய்த்துறை வாரியம் சிபார்சு செய்து, அதற்குப் பிறகு அரசுக்கு வரவேண்டி இருந்தது. அந்தச் சங்கடங்களைப் போக்கத்தான், வட்டாட்சித் தலைவர், கோட்டாச்சித் தலைவர் சிபாரிசு செய்தால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். வருவாய் வாரியத்திற்குப் போகாமல் நேரடியாக அரசுக்கு வரவேண்டும் என்று உத்தரவிட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பப்பாளி மரத்தில இருந்து அம்மாதிரி கீழே விழுந்து இறந்துபோனால் அரசு உதவித்தொகை கொடுக்கப்படுமா?

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இதுவரையிலும் பப்பாளி மரத்தில் இருந்து கீழே விழுந்ததாகத் தகவல் இல்லை. பப்பாளி மரத்தை கீழே இருந்து ஒடித்துப் போட்டதாகத்தான் தகவல் இருக்கிறது.

திரு. கா. வே. கந்தசாமி: தலைவர் அவர்களே, விவசாயிகள் மருந்து அடிக்கும்போது, பவர் ஸ்பேரயரால் அடிக்கும்போது, ஏழைகள், விவசாயக் கூலிகள், அந்த மருந்தால் பாதிக்கப் பட்டால் அல்லது இரத்தச் சேதம் அடைந்தால்.. அவர்களுக்கும் ரூ. 5,000 கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே இதுவும் அந்த நிவாரணத்தில் வருகிறது. பூச்சி மருந்து அடிக்கிற போது அதனால் பாதிக்கப்பட்டு இறந்தாலும் அதற்குப் பணம் ரூ. 5,000 கொடுக்கப்படுகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அநேக பனை ஏறும் தொழிலாளர்கள் கீழே விழுந்து மரணம் அடைந்த நேரத்தில் அவர்களுடைய மனைவி விண்ணப்பித்து கேட்டால், சொத்து எவ்வளவு இருக்கிறது என்று கேட்கிறபோது கிராம கர்ணம், வில்லேஜ் முன்சீப், அதிகமாக தருகிறார்கள். சொத்து இருந்தால் மரணம் அடைந்த தொழிலாளர் குடும்பத்திற்குக் கொடுக்கிற பணம் மறுக்கப்படுமா? அல்லது, கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, இப்படிப்பட்ட சங்கடங்கள் குறித்து மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று என்னென்ன சங்கடங்கள் இருந்தாலும் அவைகளை இங்கே சொன்னாலும் சரி, தனியாகச் சொன்னாலும் சரி, அதை யெல்லாம் போக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மதுமரத் தொழிலாளர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை 10,000 ரூபாய் என்று அறிவிக்க இயலுமா? ஒன்று, இரண்டு, கள்ளுக்கு விலக்கு அளித்து, மது மரத் தொழிலாளர்கள் நிரந்தரமாக வேலை பெற வழி வகுக்கும் வகையில், கள்ளுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதன்முதலில் சொன்னேன். இதற்கு முன்பு அவர்களுக்கு எல்லாம் ரூ. 750லிருந்து ரூ. 1,000 வரை தான் கொடுக்கப்பட்டது. 1977–78 வரவு செலவுத் திட்டத்தின்போது தான் இந்த அரசு ரூ. 5,000 என்று அதை உயர்த்தி இருக்கிறது. ரூ. 750 என்று இருந்ததில் இருந்து எவ்வளவு தாண்டி வந்து இருக்கிறது. ரூ. 1,000 என்று இருந்தது ரூ. 5,000 என்ற அளவில் 5 மடங்காக உயர்ந்து இருக்கிறது. அதற்கு மேல் கொடுப்பதற்கு யோசிக்கப்படும்.

மேட்டுப்பாளையம், குன்னூர் சர்வீஸ் நிர்வாகத் தொழிலாளர்கள்.

*குறுகிய கால வினா எண். 36—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (M. C. S. Bus) நிர்வாகம் தம் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையினை திருப்பித்தர என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளிகளுக்குச் சேரவேண்டிய தொகையினை நிர்வாகத்தினரிமிருந்து வசூலித்து தொழிலாளர்களுக்கு திருப்பியளிக்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1976ஆம் ஆண்டிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த ஆணைகளின் மீது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிடம் சட்ட சம்பந்தப்பட்ட சில விளக்கங்கள் கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு விளக்கங்களை அளித்தவுடன் ஆட்சித் தலைவர் தொழிலாளர்களுக்குத் தொகைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (எம். சி. எஸ். பஸ்) நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிலாளர்களையும், அந்த சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை சந்தித்துப்பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டதாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?